**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
**நிர்வாகக் கிளை**

அனுப்புநர்
பொறி. தெ.ரவிச்சந்திரன், **B.E.,**
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு
144, அண்ணா சாலை,
சென்னை - 600 002.

பெறுநர்
அனைத்து தலைமை பொறியாளர்கள்,
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்,

கடித. எண். 009810/64/ஜி.9/ஜி.92/2021, நாள். 17.02.2021.

பொருள் நிர்வாகம் - வாரிசு வேலை — தங்களது வட்டத்தில் வாரிசு வேலை தொடர்பாக பெறப்படும் விண்ணப்பம் / நிலுவையிலுள்ள கருத்துருக்களின் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்வது குறித்து வழிக்காட்டுதல் - தொடர்பாக.

பார்வை **MEMO NO. CE/PERSONNEL-SUPDT.CUM STENO/ D.NO.1/2021, DATED.** 12.02.2021

!!!!!

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணிபுரிந்து பணியிடை மரணமடைந்த மற்றும் மருத்துவ இயலாமை காரணமாக வாரிசு வேலை வழங்க கோரி பெறப்படும் விண்ணப்பம் / நிலுவையிலுள்ள கருத்துருக்களின் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்வது குறித்து கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| அ. | பணியாளர் இறந்த பின்னர் அவரது வாரிசுதாரர்கள் வாரிசு வேலை வழங்க வேண்டி அளிக்கும் விண்ணப்பம் மீது உதவி செயற்பொறியாளர் / செயற்பொறியாளர் (களவிசாரணை அலுவலர்) அவர்களால் நடத்தப்படும் களவிசாரணை அவசியமற்றது. |
| ஆ | விண்ணப்பதாரர்களின் கல்வித்தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்த பின்னர் அவர்களின் கல்வித்தகுதி குறித்த உண்மைத்தன்மையினை சம்பந்தப்பட்ட துறையிலிருந்து பெறப்பட்ட பின்னரே தகுதிகாண் பருவம் ( **PROBATION PERIOD)** அனுமதிக்கப்பட வேண்டும். |
| இ. | வாரியப்பணியாளரின் கல்வித்தகுதி போலியானது என உறுதி செய்யப்பட்டால் அவரை பணி நீக்கம்(**DISSMISS**) செய்வது குறித்த நடவடிக்கை மேற்கொள்வதுடன் அப்பணியாளர் மீது காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை(**FIR**) பதிவு செய்யப்பட வேண்டும். |

- 2

2) எனவே மேற்குறிப்பிட்டுள்ள வழிக்காட்டுதலின்படி வாரிசு வேலை வழங்குவது குறித்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

( தலைவர் (மற்றும்) மேலாண்மை இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி)

தங்கள் உண்மையுள்ள,

ஒப்பம். 17.02.2021
(கமலா)
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/ஆள்சேர்ப்பு
தலைமைப் பொறியாளர்/பணியமைப்புக்காக